**குறைவில்லாமல் லாபம் கொடுக்கும் குள்ளங்கார் நெல்..**



குறைந்த நாட்களில், அதிக மகசூல் என்பது தான் வீரிய ஒட்டு ரக நெல் விதைகளக்குச் சொல்லப் படும் தாரக மந்திரம். ஆனால் அதைச் சாகுபடி செய்வதற்குள் மூட்டைக் கணக்கில் ரசாயன உரங்களையும், லிட்டர் கணக்கில் பூச்சிக் கொல்லிகளையும் அள்ளி இறைக்க வேண்டியிருக்கும். அதே சமயம், இவ்வளவெல்லாம் பாடுபடாமல், இயற்கை முறையிலேயே வீரிய ரகங்களுக்குக் கொஞ்சமும் குறைவில்லாமல், குறைந்த நாட்களிலேயே மகசூல் கொடுக்கக் கூடிய பாரம்பரிய விதைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

அதுபோன்ற பாரம்பரிய ரகங்களைத் தேடிப்பிடித்து சாகுபடி செய்துவரும் இயற்கை விவசாயிகளில் ஒருவர்.. காஞ்சிபுரம் மாவட்டம், கட்டியாம்பந்தல் கிராமத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன். இவர் குள்ளங்கார் ரக நெல்லைச் சாகுபடி செய்து வருகிறார்.

குள்ளங்கார் நெல் ரகத்துக்கு வயது 90 நாட்கள். கார்த்திகை, மார்கழி பட்டங்கள் ஏற்றவை. நடவு மற்றும் நேரடி விதைப்பு என்று இரண்டு முறைகளுக்குமே ஏற்ற ரகம். எல்லா மண் வகைகளிலும் நன்கு வளரும் தன்மை கொண்டது. நாற்றுப்பாவி நடவு செய்ய வேண்டுமென்றால், ஏக்கருக்கு 25 கிலோ விதை நெல் தேவைப்படும். நேரடி விதைப்புக்கு 9 கிலோ போதுமானது. நேரடி விதைப்பில் அதிக தூர்கள் பிடித்து, கூடுதல் மகசூல் கிடைக்கும்.

**விதை நேர்த்திக்கு பீஜாமிர்தம்**

பத்து லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ கல் உப்பைக் கரைத்து, அதில் 10 கிலோ விதை நெல்லைக் கொட்ட வேண்டும். மிதக்கும் விதைகளை நீக்கிவிட்டு, மூழ்கிய நெல்லை மட்டும் எடுத்து

தண்ணீரில் அலசி, அதிலிருந்து 9 கிலோ நெல்லை எடுத்துக் கொள்ள வேண்டும்.பிறகு, பீஜாமிர்தத்தில் இரண்ட மணி நேரம் ஊற வைத்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். அடுத்து, சணல் சாக்கில் நெல்லைக் கொட்டி, அதை மூட்டையாகக் கட்டி, 12 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து எடுத்து, 24 மணிநேரம் இருட்டில் வைத்திருந்து, பிறகு விதைக்க வேண்டும்.

**அடியுரத்திற்க்கு கன ஜீவாமிர்தம்**

நிலத்தை நான்கு சால் சேற்று உழவு செய்து, 300 கிலோ மட்கிய தொழுவுரம், 100 கிலோ கன ஜீவாமிர்தம் ஆகியவற்றைக் கலந்து நிலத்தில் பரப்பி வயலைப் பரம்படிக்க வேண்டும். பிறகு, வயலில் காலை அல்லது மாலை நேரத்தில் ஓர் அங்குல உயரத்திற்க்குத் தண்ணீர் நிறுத்தி, நேரடி நெல் விதைப்புக் கருவி மூலம் விதைக்க வேண்டும். அதில் முக்கால் அடி இடைவெளியில் நான்கைந்து விதைகள் விதைக்கப்படும்.

விதைத்த பிறகு, வயலில் இருந்து தண்ணீரை வடித்துவிட வேண்டும். விதைத்த தினத்தன்று மழை பெய்யும் என்று எதிர்பார்த்தால், தண்ணீரை வடிக்கக் கூடாது. மழை நின்ற பிறகு தான் வடிக்க வேண்டும். இல்லாவிடில் மழையால் விதைகள் புரண்டு விடும். தொடர்ந்து 3, 5 மற்றும் 7-ம் நாட்களில் தண்ணீர் கட்டி, ஒரு மணி நேரம் வைத்திருந்து வடித்துவிட வேண்டும். 11-ம் நாள் வயலில் ஓர் அங்குல உயரத்திற்க்கு தண்ணீர் கட்டி, 25 கிலோ கன ஜீவாமிர்தத்தை வயல் முழுவதும் தூவ வெண்டும். தொடர்ந்து காய்ச்சலும் பாய்ச்சலுமாகத் தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது.

பத்து நாட்களுக்கு ஒரு முறை 200 லிட்டர் ஜீவாமிர்தத்தைப் பாசன நீரில் கலந்துவிட வேண்டும். இதே போல் பத்து நாட்களுக்கு ஒரு முறை 60 லிட்டர் தண்ணீரில் 3 லிட்டர் ஜீவாமிர்தத்தைக் கலந்து வயல் முழுக்கத் தெளித்து விட வேண்டும். விதைத்த 20 மற்றும் 35ம் நாட்களில் கோனோவீடர் மூலம் களைகளை அழுத்திவிட வேண்டும். இதனால் பயிரின் பக்க வேர்கள் அறுபட்டு, அதிக தூர்கள் பிடிக்கும்.

**பூச்சிகளுக்கு அஸ்திரங்கள் !**

இலைப்பேன், வெட்டுக்கிளி, புகையான் வைரஸ் தாக்குதல் ஆகியவை இருந்தால்.. 60 லிட்டர் தண்ணீரில் 3 லிட்டர் பிரம்மாஸ்திரத்தைக் கலந்த தெளிக்க வேண்டும். ஒரு வேளை இதற்குக் கட்டுப்படாவிட்டால், 60 லிட்டர் தண்ணீரில் 1,200 மில்லி அக்னி அஸ்திரத்தைக் கலந்து தெளிக்கலாம். இவை தவிர, வயலில் வேறு எந்த வேலையும் பார்க்கத் தேவையில்லை. வேறு

ஊட்டங்களும் அளிக்கத் தேவையில்லை. 60 நாளில் கதிரி பிடித்த.. 80 ம் நாளுக்கு மேல் முற்றி.. 90 ம் நாளில் அறுவடைக்குத் தயாராகி விடும்.

ஒவ்வொரு தூரிலும் 25 முதல் 35 சிம்பு வரை இருந்தது. ஒவ்வொரு சிம்புலயும் 120 முதல் 150 நெல் மணிகள் வரை இருந்தது. அறுவடை செய்த பிறகு 25 மூட்டை ( 75 கிலோ மூட்டை) நெல்கிடைத்திருக்கு. அரிசியாக அரைத்து வற்கலாம் என்று இருக்கிறேன். ஒரு மூட்டைக்கு சராசரியாக 45 கிலோ வரை அரிசி கிடைக்கும். அந்தக் கணக்கில் பார்த்தால்.. எப்படியும் மொத்தம் 1,125 கிலோ அரிசி கிடைக்கும். கிலோ 25 ரூபாய் என்று விற்பனை செய்தாலே 28,125 ரூபாய் கிடைக்கும். செலவு போக எப்படியும் 20 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.

**பிரம்மாஸ்திரம்**

சாணம் – 5 கிலோ

மாட்டுச் சிறுநீர் – 5லிட்டர்

வேப்பிலை  - 5 கிலோ

புங்கன் இலை – 2 கிலோ

ஆடாதொடை இலை – 2 கிலோ

எருக்கன் இலை – 2 கிலோ

நுனா இலை – 2 கிலோ

ஊமத்தை – 2 செடி

**அக்னி அஸ்திரம்**

புகையிலை – 1 கிலோ

பூண்டு – அரைக் கிலோ

பச்சைமிளகாய் – அரைக் கிலோ

வேப்பிலை – 5 கிலோ

இவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து இடித்து, மண்பானையில் இட்டு, 15 லிட்டர் மாட்டுச் சிறுநீரைக் கலந்து, ஆறு லிட்டர் கரைசலாக சுண்டும் வரை கொதிக்க வைக்க வேண்டும். இறக்கி

வைத்து 48 மணி நேரம் கழித்து வடிகட்டினால்.. அக்னி அஸ்திரம் தயார். மூன்று மாதங்கள் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம்.

**பீஜாமிர்தம்**

சாணம் – 2 கிலோ

மாட்டுச் சிறுநீர் – 2 லிட்டர்

சுத்தமானச் சுண்ணாம்பு – 50 கிராம்

ஜீவனுள்ள மண் – ஒரு கைப்பிடி இவற்றை 15 லிட்டர் தண்ணீரில் கலந்து 12 மணி நேரம் வைத்திருந்தால், பீஜாமிர்தம் தயார்.

**கன ஜீவாமிர்தம்**

சாணம் – 100 கிலோ, மாட்டுச் சிறுநீர் – 10 லிட்டர் ஆகியவற்றுடன், முளைகட்ட வைத்து பொடித்த சிறுதானியக் கலவை நான்கு கிலோ அளவில் கலந்து பிசைந்து உலர்த்தி எடுத்து பத்திரப்படுத்த வேண்டும். இதை ஆறு மாதங்கள் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம்.

ஒரு ஏக்கரில் குள்ளங்கார் நெல் சாகுபடிக்கு ரவிச்சந்திரன் சொல்லும் செலவு – வரவு கணக்கு

| விவரம் | செலவு | வரவு |
|---|---:|---:|
| உழவு | 1,500 | |
| விதை | 300 | |
| வரப்பு வெட்ட | 300 | |
| விதைப்பு | 300 | |
| களை | 1,800 | |
| இயற்கை இடுப்பொருட்கள் | 1,000 | |
| தெளிப்பு | 600 | |
| அறுவடை | 2,000 | |
| அரிசி விற்பனை | | 28,125 |
| **மொத்தம்** | **7,800** | **28125** |
| **நிகரலாபம்** | | **20,325** |

**தொடர்புக்கு** :

ரவிச்சந்திரன், அலைபேசி : 94442-02362.

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 25.06.11 www.vikatan.com